


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 261 | 4 Pages | 29.07.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| மலர்: 03 | இதழ்: 261 | 4 பக்கங்கள் | 29.07.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்கா தெனின்**

**விளக்கம்:**
**மழை பெய்யவில்லையானால், இந்தப் பெரிய உலகத்தில் பிறர்பொருட்டுச் செய்யும் தானமும், தம் பொருட்டுச் செய்யும் தவமும் இல்லையாகும்.**

# பிரதமர் மோடியின் செல்பி வீடியோ: மன்னிப்பு கோரியது மெட்டா நிறுவனம்




புதுடெல்லி, ஜூலை 29

அண்மையில் நீட் தேர்வு வினாத்தாள் கசிவை தடுப்பது மற்றும் தேர்வு முறைகளை சீரமைப்பது தொடர்பாக மாணவர்களுக்கு முக்கிய வாக்குறுதிகளுடன் பிரதமர் மோடி செல்பி வீடியோ ஒன்றை சமூக வலைதளத்தில் வெளியிட்டார். அந்த வீடியோ 24 மணி நேரத்திற்குள் 30.3 கோடி பார்வைகளை கடந்து உலக சாதனை படைத்தது.

அப்போது பிரதமர் மோடியின் பேஸ்புக் வீடியோ சிறிது நேரம் தவறுதலாக நீக்கப்பட்டதற்கு மெட்டா நிறுவனம் வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோரியுள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த நீக்கம் நிகழ்ந்ததாகத் தெரிவித்துள்ளது, பின்னர் அந்த வீடியோ மீண்டும் பேஸ்புக்கில் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டது என விளக்கம் அளித்தது. பிரதமர் மோடியின் வீடியோ நீக்கப்பட்டது ஒரு செயல்பாட்டுப் பிழை என மெட்டா நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

இதனிடையே மெட்டா நிறுவனத்தின் சர்வதேச தலைவருக்கு மத்திய அரசு சம்மன் அனுப்பி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மிகப்பெரிய விசாரணை நடத்த மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகவும் மத்திய அரசு தரப்பில் கூறப்படுகிறது.

# காவிரி நீர் பிரச்சினையில் முதல்அமைச்சர் விஜய் என்னை சந்தித்து பேச விருப்பம்: டி.கே.சிவக்குமார்



புதுடெல்லி, ஜூலை 29

டெல்லியில் கர்நாடக முதல்மந்திரி டி.கே. சிவக்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நான் சமீபத்தில் பிரதமர் மோடியை நேரில் சந்தித்து பேசினேன். அப்போது இந்த ஆண்டு நாட்டில் வறட்சி ஏற்படும் நிலை இருப்பதாக அவர் கூறினார். கர்நாடகத்தின் வளர்ச்சிக்கு உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன. இதற்கு அனுமதி பெற்றுத்தர நீங்கள் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கிருஷ்ணா, தென்பெண்ணை, காவிரி, கோதாவரி நதிகள் இணைப்புக்கு நாங்கள் (கர்நாடகம்) ஒப்புக் கொண்டுள்ளோம். காவிரி நீர் பிரச்சினை தொடர்பாகதமிழகமுதல்அமைச்சர்விஜய்என்னைசந்தித்துபேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார். மேகதாது திட்ட விஷயத்தில் தமிழகம், கர்நாடகம் பயன்பெறும் வகையில் தீர்ப்பு வழங்கியுள்ளன.

கர்நாடக மண்ணில் மேகதாது அணை கட்ட வேறு மாநிலத்தின் அனுமதி தேவை இல்லை. இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் உரிமையும் தமிழ்நாட்டுக்கு இல்லை என்று சுப்ரீம் கோர்ட்டு தெளிவாக கூறியுள்ளது. மாநிலங்களவையில் அன்புமணி ராமதாஸ் எம்.பி கேட்ட கேள்விக்கு மேகதாது அணை கட்ட தமிழகத்தின் அனுமதி தேவை இல்லை என்று மத்தியமந்திரிகூறியுள்ளார்.இதற்காகமத்தியஅரசுக்குநன்றிதெரிவிக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# போராட்டத்தில் கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்க வேண்டும்: சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

புதுடெல்லி, ஜூலை 29

நீட்தேர்வுமுறைகேடுகளைஎதிர்த்துடெல்லியில்போராடியகரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கடந்த 20ந்தேதி நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடத்தினர். இதை போலீசார் தடுத்து நிறுத்தியபோது வன்முறை வெடித்தது. அதில் போலீசார்தடியடி நடத்தியும், கண்ணீர்புகைகுண்டுகளையும்வீசினர்.அத்துடன்பெல்லட்குண்டுகளையும் வீசி போராட்டக்காரர்களை கலைத்தனர். இதில் இரு தரப்பிலும் பலருக்கு காயம் ஏற்பட்டது.

போலீசாரின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் பல வழக்குகள் தொடரப்பட்டு உள்ளன. மேலும் காயமடைந்த போலீசார் தரப்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட் டன. இந்த வழக்குகள் தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜோய்மால்யா பாக்சி, மோகனா அமர்வில் நேற்று விசார ணைக்கு வந்தது. அப்போது போலீசாரின் தடியடி நடவடிக்கைகளுக்கு நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

அதன் விவரம் பின்வருமாறு: மாணவர்கள் போராடுவதற்கு அனைத்து அரசியல்சாசனஉரிமையும்உள்ளது.கைதுசெய்யப்பட்டுள்ளமாணவர்களை உடனடியாக விடுக்க வேண்டும். கிரிமினல் குற்ற பின்னணி இல்லாத நபர்கள்யாராவதுசிறையில்அடைக்கப்பட்டிருந்தால்விடுவிக்கவேண்டும். வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் மீது எந்தவிதமான கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடாது. போராட்டங்கள் நடைபெற்ற மராட்டியம், பீகார், உத்தர பிரதேசம் அசாம் உள்ளிட்ட மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். வன்முறை சிசிடிவி காட்சிகள், வீடியோ பதிவுகள் என அனைத்து ஆதரங்களையும் பத்திரமாக வைக்க வேண்டும். தேவைப்படும்போது நீதிமன்றத்தில் அதை சமர்ப்பிக்க வேண்டும். மாணவர்கள் மீது தடியடி நடத்திய வழக்கில் விசாரணை குழு அமைக்க முகாந்திரம் உள்ளது. மாணவர்கள் போராட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து ஆழமான, விரிவான விசாரணை நடத்த வேண்டும். விசாரணை சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் இருக்க வேண்டும். சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு (எஸ்ஐடி) உத்தரவிடுகிறேன். இவ்வாறு உத்தரவுகளைபிறப்பித்ததலைமைநீதிபதி வழக்கு விசாரணையை ஆகஸ்ட் 3ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# மேகதாது விவகாரம்: பிரதமர் மோடி உடனடியாக தலையிட வேண்டும்; முதல்வர் விஜய் வலியுறுத்தல்




சென்னை, ஜூலை 29

மேகதாது அணை கட்ட தமிழக ஒப்புதல் தேவையில்லை என்ற பதிலுக்கு முதல்அமைச்சர் விஜய் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு அவர் எழுதி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கர்நாடகா காவிரி குறுக்கே அமைப்பை உருவாக்க கீழ்ப்படியான மாநிலங்களின் ஒப்புதல் பெற தேவையில்லை என்றநீர்வளத்துறைபதிலைதிரும்ப பெற வேண்டும். 2018 ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு குறித்த மத்திய நீர்வளத்துறை இணை மந்திரி கருத்து ஏமாற்றமளிக்கும் பதில். மேகதாது அணை திட்டத்துக்கு எந்தவிஅத சட்டப்பூர்வ அல்லது நிர்வாக அனுமதியும் வழங்கக்கூடாது,

காவிரி என்பது வெறும் நீர் ஆதாரம் மட்டுமல்ல, லட்சக்கணக்கான விவசாயிகள் வாழ்வாதாரம்.கடைமடை மாநில அனுமதியின்றி மேலே உள்ள மாநிலம் அணை கட்ட முடியாது. நீர்வளத்துறை இணைமந்திரி அளித்த பதிலை திரும்ப பெற உத்திரவிட வேண்டும்.

தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நீரின் அளவு, நீர்வரத்து சீராக இருப்பதைஉறுதிசெய்யவேண்டும்.

மேகதாது அணைக்கு எந்த அனுமதியும் தரக்கூடாது. முழுமையான தொழில்நுட்ப, சட்டப்பூர்வ ஆய்வுக்கு பிறகே இத்திட்டம் குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.தமிழகம் ஒப்புதலின்றி கட்டுமானம் கூடாது.

கீழ்பாசன மாநிலங்களுக்கு செல்லும் நீரின் அளவை பாதிக்கும் திட்டத்தை ஒப்புதலின்றி செயல்படுத்த முடியாது. மேகதாது அணை திட்டத்துக்கு எந்தவித சட்டப்பூர்வ அல்லது நிர்வாக அனுமதியும் வழங்கக்கூடாது. மேகதாது விவகாரத்தில் உடனடியாக தலையிட வேண்டும். என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராயபுரம் எஸ்டிபிஐ மாநில தலைமையகத்தில் தீ விபத்து – ரூ.5 லட்சத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் எரிந்து சேதம்



சென்னை ராயபுரம், இப்ராஹிம் சாகிப் சாலையில் அமைந்துள்ள எஸ்டிபிஐ மாநில தலைமையகத்தில் இன்று திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் அலுவலகப் பொருட்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசமானது.

தகவலின்படி,அலுவலகத்தின்கீழ்தளசுவர்களுக்குபெயிண்ட் அடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள், நீண்ட நாட்களாக பயன்படுத்தப்படாமல் இருந்த குளிர்சாதன (ஏசி) இயந்திரத்தை இயக்கிவிட்டு மேல்தளத்திற்கு சென்றுள்ளனர். அப்போது ஏசியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீப்பிடித்து, அருகில் இருந்த பெயிண்ட் பொருட்களுக்கும் பரவி அறை முழுவதும் தீ பரவியது.

இந்த தீ விபத்தில் 1கணினி, நான்கு சோபாக்கள், பத்து நாற்காலிகள், ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த பீரோ மற்றும் முக்கிய தஸ்தாவேஜ்கள் உள்ளிட்ட அலுவலகப் பொருட்கள் எரிந்து சேதமடைந்தன. தீ விபத்தை கண்ட எஸ்டிபிஐ நிர்வாகிகள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடனடியாக தீயை அணைக்க முயற்சி செய்ததுடன், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து ராயபுரம் மற்றும் உயர்நீதிமன்ற தீயணைப்பு நிலையங்களிலிருந்து நிலைய அலுவலர்கள் ராஜ்குமார் மற்றும் கருணாநிதி தலைமையில் பத்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து, சுமார் அரை மணி நேரம் போராடி தீயை முழுமையாக கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தவிபத்தில்உயிரிழப்புஅல்லதுகாயம்எதுவும்ஏற்படாதது அதிர்ஷ்டவசமானதாகும். இருப்பினும்அலுவலகத்தில்இருந்த முக்கிய ஆவணங்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகின.

இந்த சம்பவம் தொடர்பாக பி1 வடக்கு கடற்கரை காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த தீ விபத்தில் ரூ.5 லட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்துள்ளதாக எஸ்டிபிஐ நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# ரியல் எஸ்டேட் நிறுவன அத்துமீறலை தட்டி கேட்டு திமுக ஊராட்சி மன்ற தலைவர் மீது பொய் வழக்கு : வழக்குப்பதிவு செய்யாமல் இருக்க 50 ஆயிரம் லஞ்சம் கேட்ட உதவி ஆய்வாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக்கோரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு



பொதுப்பாதை ஆக்கிரமிப்பைத் தட்டிக்கேட்ட திமுக ஊராட்சி மன்றத் தலைவர் மீது பொய் வழக்குப்பதிவு செய்ததோடு வழக்குப்பதிவு செய்யாமல் இருக்க50,000லஞ்சம்கேட்டமாமல்லபுரம் காவல் உதவி ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி செங்கல்பட்டு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் செங்கேணி கண்ணீர் மல்கப் புகார் மனு அளித்துள்ளார்

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம்அருகேஉள்ளமணம்மை ஊராட்சி அம்பேத்கர் நகர் பகுதியில் விவசாயிகளுக்குச் சொந்தமான சுமார் 100 ஏக்கர் நிலம் உள்ளது இந்த நிலத்திற்குச் செல்லும் வழியில் உள்ள இடத்தை ஒரு தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனம் வாங்கி மனைகளாகப் பிரித்து விற்பனை செய்து வருகிறது இந்நிலையில் விவசாய நிலத் திற்கு செல்ல பொதுமக்களின் பயன்பாட்டி ற்காகத் தானமாக வழங்கப்பட்ட பொதுப் பாதையையும் அந்த ரியல் எஸ்டேட் நிறுவ னம் ஆக்கிரமித்துள்ளதாகக் கூறப்படுகிறது

இந்த ஆக்கிரமிப்பை அகற்றுமாறு பல முறை வலியுறுத்தியும் நிறுவனம் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

இதையடுத்து மணம்மை திமுக ஊராட்சி மன்றத்தலைவரானசெங்கேணிநேரடியாகச் சென்றுரியல்எஸ்டேட்நிறுவனத்தரப்பிடம் நியாயம் கேட்டுள்ளார் இதனால் ஆத்திர மடைந்த எதிர் தரப்பினர் ஊராட்சி மன்ற தலைவர் செங்கேணி மீது மாமல்ல புரம் காவல் நிலையத்தில் அவதூறு புகார் அளித்தனர் இந்தப் புகாரின் மீது வழக்குப்பதிவு செய்யாமல் இருக்க, மாமல்லபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பரசுராமன் என்பவர் ஊராட்சி மன்ற தலைவர் செங் கேணியிடம் 50,000 லஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால்லஞ்சப்பணத்தைக் கொடுக்க செங்கேணி மறுத்ததால் ஆத்திரமடைந்த உதவி ஆய்வாளர் அவர் மீது பொய் வழக்குப் பதிவு செய்துள்ளார்

காவல்துறையின் இந்த அநீதியான நடவடிக்கையால் மனவேதனையடைந்த ஊராட்சி மன்றத் தலைவர் செங்கேணி செங்கல்பட்டு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று புகார் மனு அளித்தார் அதில் ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் அத்துமீறலைத் தட்டிக்கேட்ட என் மீது பொய் வழக்குப் பதிவு செய்ததோடு லஞ்சம் கேட்டு மிரட்டிய உதவி ஆய்வாளர் பரசுராமன் மீது துறை ரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணீர் மல்கக் கேட் டுக்கொண்டுள்ளார் இச்சம்பவம் அப்பகு தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது பாமர மக்களின் பாதையைக் மீட்கப் போராடும் ஒரு மக்கள் பிரதிநிதிக்கே இந்த கதி என்றால் சாதாரண எளிய மக்களின் நிலை என்ன? மக்களின் சேவகர்கள் என்ற முகமூடியைப் போட்டுக்கொண்டு, 50,000 லஞ்சத்திற்காகப் பொய் வழக்குகளை வாரி வீசும் இது போன்ற கருப்பு ஆடுகளால் காவல்துறையின் மானமே கப்பலேறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது




திருவாரூர் மாவட்டம், குடவாசல் பகுதியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில், வேளாண்மைஉழவர் நலத்துறையின் சார்பில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள். வேளாண்மை இணை இயக்குநர் திருமதி.வித்யா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை இணை இயக்குநர் திருமதி.வித்யா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.5.8 கோடி தங்கம் பறிமுதல்




சென்னை ஜூலை 29

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு சிங்கப்பூரில் இருந்து விமானம் வந்தது. அதில் வந்த பயணிகளை, விமானநிலையசுங்கஇலாகா நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வந்தனர். அப்போது வடமாநிலத்தை சேர்ந்த 30 வயது வாலிபர் ஒருவர், சுற்றுலா விசாவில் சிங்கப்பூர் சென்றுவிட்டு சென்னை திரும்பி வந்திருந்தார். அவர் மீது சந்தேகம் அடைந்த சுங்க இலாகா அதிகாரிகள், அவரை நிறுத்தி விசாரணை நடத்தினர். அப்போது அவர் முன்னுக்குப்பின்முரணாகபதில்அளித்தார்.

இதையடுத்து அவரது உடைமைகளை முழுமையாக சோதனை செய்தனர். அவர் கொண்டு வந்த சூட்கேசின் மேல் பகுதியில் ரகசிய அறை அமைக்கப்பட்டு இருந்ததை கண்டு பிடித்தனர். அந்த ரகசிய அறையை பிரித்து பார்த்தபோது, அதில் தங்க கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அவற்றை வெளியே எடுத்து எடை போட்டபோது, 3 கிலோ 960 கிராம் இருப்பது தெரியவந்தது. இதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.5 கோடியே 80 லட்சம் ஆகும். அந்ததங்ககட்டிகளைசுங்கஇலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

மேலும், இந்த தங்கத்தை கடத்திவர அவரை சிங்கப்பூர் அனுப்பிய நபர் யார்? இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார்? என்பது குறித்து பிடிபட்ட வாலிபரிடம் சுங்க இலாகா அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மழை வெள்ள முன்னெச்சரிக்கை: அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய் தூர்வாரும் பணிகள் தீவிரம்: அமைச்சர் என். ஆனந்த் நேரில் ஆய்வு

சென்னை, ஜூலை 29

தமிழ்நாடு முதல்அமைச்சர் ஜோசப் விஜய் உத்தரவுப்படி இன்று காலை 9.00 மணியளவில் சென்னைமாவட்டம், ஆலந்தூர்வட்டம், மணப்பாக்கம் கிராமம் அடையாறு ஆற்றுப்பகுதியினை தூர்வாரி சீரமைக்கும் பணி தொடங்கி வைத்து கள ஆய்வு மேற்கொண்டார்.

அதன் பிறகு காலை 11.00 மணியளவில் சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர்வட்டம்சோழிங்கநல்லூர், கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மாமல்லபுரம் சாலையின்இணைப்புமேம்பாலம்அருகேஅமைந்துள்ள தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயில் தூர்வாரி சீரமைக்கும் பணியை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த் அவர்கள் கள ஆய்வு செய்து தொடங்கி வைத்தார்கள்.

அடையாறு ஆறு சென்னை நகரின் மூன்று முக்கிய ஆற்றுப்படுகையில் ஒன்றாகும். அடையாறு ஆறு ஆதனூர் ஏரியில் இருந்து உருவாகி மொத்தம் 42.38கி. மீ நீளத்திற்கு பயணித்து பட்டினம்பாக்கம் சீனிவாசபுரம் அருகில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. அடையாறு ஆற்றின் நீர்பிடிப்பு பரப்பளவு 808 சதுர.கிமீ ஆகும். மேலும் அடையாறு ஆறு காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஏரிகளிலிருந்தும் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரி நீரையும், மழை நீரையும் கடலில் கலக்கிறது. செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் அடையாறு ஆற்றில் தொலைதூரம் 17.18 கி.மீ கலக்கிறது. பின் அடையாறு ஆறு 17.00 கி.மீ சென்னை மாவட்டத்தில் பாய்ந்து கடலில் கலக்கிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குள் ஓடும் இந்த ஆற்றில் ஆகாயத்தாமரைகள் மிதவைத் தாவரங்கள் மற்றும் மிதவைப் பொருட்கள் படர்ந்து நீரோட்டத்தை பாதிக்கும் வகையில் உள்ளது.

நீர்வளத்துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனம் இணைந்து தூர்வாரும் பணியை மேற்கொள்வதன் காரணத்தினால், அடையாறு ஆற்றில் விமான நிலைய ஓடுபாதை கீழ் நீரோட்டப்பாதை முதல் திரு.வி.க பாலம் வரை மற்றும் அடையாறு முகத்துவாரத்தில் பணி மேற்கொள்ளப்படுவதால், சென்னை பெருநகர பகுதிகளான மணப்பாக்கம், நந்தம்பாக்கம், கோடம்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை, கோட்டூர் புரம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் அடையாறு ஆற்றில் மழை மற்றும் வெள்ள நீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை ஆகும். பக்கிங்ஹாம் கால்வாய் பழவேற்காடு ஏரியிலிருந்து மரக்காணம் உப்பங்கழினி வரை உள்ளது. 167 கி.மீ நீளமும் 20 முதல் 100 மீட்டர் வரை மாறுபட்ட அகலம் கொண்டுள்ளது. தெற்கு பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு ஆற்றின் பகுதியில் இருந்து முட்டுக்காடு முகத்துவாரம் வரை சுமார் 23.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ளது. வெள்ளப்பெருக்கு காலங்களில் இக்கால்வாயில் சுமார் 8000 கன அடி மழைநீரானது ஒக்கியம் மடுவு வழியாக வங்காள விரிகுடாவில் சென்று சங்கமிக்கிறது.



சோழிங்கநல்லூர் பகுதியில், கிழக்கு கடற்கரைசாலை மற்றும் பழைய மாமல்லபுரம் சாலை இணைப்பு மேம்பாலம் அருகில் அமைந்துள்ள தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயில் அதிக அளவில் ஆகாயத்தாமரை, மிதக்கும் பொருட்கள் மேலே உள்ள பள்ளிக்கரணை மற்றும் ஒக்கியமடுவுபோன்றபகுதிகளில்இருந்துநீரோட்டத்தில் அடித்துவரப்பட்டும், மேலும்அப்பகுதியில்வளர்ந்துள்ள நீர்த்தாவரங்களும் சேர்ந்து அதிக அளவில் காணப்படுகிறது. இது நீரோட்டத்தை கடுமையாக பாதிப்பது மட்டுமின்றி, நீர் கடத்தும் திறனையும் குறைக்கின்றது. இதனால், மழைக்காலங்களில் நீர்த்தேக்கம்ஏற்பட்டுவெள்ளஅபாயம்அதிகரிப்பதுடன் பொதுமக்கள் மற்றும் அருகில் உள்ள குடியிருப்புகளும் பாதிப்புக்குஉள்ளாகும். தேவையற்றநீர்த்தேக்கத்தினால் துர்நாற்றம் மற்றும் கொசு உற்பத்தியாவது மட்டுமின்றி, சுகாதார கேடும் ஏற்படுகின்றது.

இவற்றை முறையாக தூர்வாரி பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், பெருநிறுவனப் பங்களிப்பு மற்றும் தன்னார்வலர்களின் பங்கேற்புடன், சோழிங்கநல்லூர் பகுதியில் அமைந்துள்ள, தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயில் அமைந்துள்ள ஆகாயத்தாமரை, மிதக்கும் பொருட்கள் மற்றும் கழிவுகள் ஆகியவற்றை அகற்றி மழைக்காலங்களில் மழை நீர் தங்கு தடையின்றி சென்று கடலில் கலக்க வழிவகை செய்யப்படவுள்ளது.

பருவ மழை காலத்திற்கு முன்னர் வெள்ள முன்னெச்சரிக்கை பணியாக, திட்டமிடப்பட்டு முடிக்க தமிழ்நாடு முதல்அமைச்சர்உத்தரவுப்படி, ஊரகவளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர்என்.ஆனந்த் அவர்கள் தூர்வாரும் பணியை கொடியசைத்து தொடங்கி வைத்து, கள ஆய்வு மேற்கொண்டு விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் விஜய் பாலாஜி , சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.சரவணன், ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.ஹரிஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் ஆஃப்தாப் ரசூல், தலைமைப் பொறியாளர்எம்.ஜானகி, நீர்வளத்துறை பொறியாளர் கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

# மேகதாது அணைக்கு தமிழகத்தின் ஒப்புதல் தேவையில்லையா? பெரும் சதி வலை பின்னப்படுகிறது அன்புமணி



சென்னை, ஜூலை 29

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

காவிரி ஆற்றின் குறுக்கே எந்த அணையையும்கட்டுவதற்குதமிழ்நாடு உள்ளிட்ட எந்த பாசன மாநிலங்களின் ஒப்புதலையும் கர்நாடக அரசு பெறத் தேவையில்லை என்றும், இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் மத்திய அரசு தெரிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. கர்நாடக அரசுக்கு ஆதரவான மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தின் இந்த நிலைப்பாடு கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் இது தொடர்பான எனது வினாவுக்கு எழுத்து மூலம் விடையளித்த மத்திய நீர்வளத்துறை இணை மந்திரி ராஜ் பூஷன் சவுத்ரி,'' காவிரி சிக்கல் தொடர்பாக 16.02.2026 ஆம் நாள் சுப்ரீம் கோர்ட் அளித்தத் தீர்ப்பில், காவிரியின் குறுக்கே எந்தவொரு கட்டுமானத்தையும் மேற்கொள்ள தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி உள்ளிட்ட பிற பாசன மாநிலங்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை'' என்று தெரிவித்துள்ளார். இதற்குசான்றாகசுப்ரீம்கோர்ட்தீர்ப்பில்இடம்பெற்றுள்ள காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின் ஒரு பத்தியையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். உச்சநீதிமன்றத் தீர்ப்பில்ஏதோஒருபகுதியைமட்டும்காட்டி, காவிரியில் தமிழகத்துக்கு எந்த உரிமையும் கிடையாது என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த மத்திய அரசு முயல்கிறது. மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டுக்கு எதிராக மத்திய அரசின் ஆதரவுடன் மிகப்பெரிய சதிவலை பின்னப்படுவதைத் தான் இந்த நடவடிக்கைகள் காட்டுகின்றன.

தமிழ்நாட்டில்மட்டுமல்ல, இந்தியாவில்மட்டுமல்ல, உலகம் முழுவதுமே கடைமடை பாசனப் பகுதிகளுக்கு பாதிப்பைஏற்படுத்தும்வகையில்எந்ததிட்டங்களையும் முதல் மடை பாசனப் பகுதிகள் செயல்படுத்தக் கூடாது என்பது தான் நடைமுறையாகும். உலக அளவிலான ஒப்பந்தங்களிலும் இந்த நிலைப்பாடு வலியுறுத்தப் பட்டுள்ளது.

காவிரி நீர்ப்பகிர்வு தொடர்பாக அப்போதைய சென்னை மாகாணத்திற்கும், மைசூர் மாகாணத்திற்கும் இடையே 1892, 1924 ஆகிய ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தங்களில் இது தெளிவாக கூறப்பட்டுள்ளது. ''புதிய பாசன அணை அல்லது சிறிய அணைக்கட்டுகளை கட்ட வேண்டும் என்று மைசூர் அரசு விரும்பும் போது, புதிய அணை தொடர்பான அனைத்து விவரங்களும் மெட்ராஸ் மாகாண அரசுக்கு முன்கூட்டியே அனுப்பப்பட்டு, பணிகள் தொடங்கப்படுவதற்கு முன்பாக ஒப்புதல் பெறப்பட வேண்டும்'' என்று ஒப்பந்தங்களில் மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாநிலங்களவையில் மத்திய மந்திரியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 16.02.2026 ஆம் நாளிட்ட தீர்ப்பின் முதல் அம்சமாக, இந்த ஒப்பந்தங்களின் கூறுகள் இப்போதும் செல்லும் என்று கூறப்பட்டிருக்கிறது. '1947 ஆம் ஆண்டின் சட்டம் அமலுக்கு வந்த பிறகு, இந்திய அரசு முழுமையான இறையாண்மைபெற்றஅதிகாரஅமைப்பாகமாறியதால், மேலாதிக்கக் கோட்பாடு செயல்படுவதற்கு இனி இடமில்லை. 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளின் இரு ஒப்பந்தங்களும் எந்தவொரு அரசியல் ஏற்பாட்டையும் கொண்டிருக்கவில்லை; மேலும் அவை இந்தியாவின் இறையாண்மையின் எந்தவொரு அம்சத்தையும் பாதிக்கவுமில்லை. மாறாக, இந்த ஒப்பந்தங்கள் எந்தவொரு அரசியல் கூறுகளும் இல்லாத, பரந்த பொது நலன்சார்ந்த விஷயங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளன.

கடைமடை பாசன மாநிலமான தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல், எந்த அணையையும் கர்நாடகம் கட்ட முடியாது என்பது தான் இதன் பொருள் ஆகும். இந்த உண்மையை மறைத்து விட்டு, மேகதாது அணை கட்ட தமிழ்நாட்டின் ஒப்புதல் தேவையில்லை என மத்திய அரசு கூறுவது திசை திருப்பும் செயல். அதுமட்டுமின்றி, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிலும் கர்நாடகத்தில் நடைமுறையில் உள்ள பாசனத் திட்டங்கள் பட்டியலிடப்பட்டு, வேறு எந்த புதிய பாசனத் திட்டமும் செயல்படுத்தப்படக் கூடாது என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு இருக்கும் போது மேகதாது அணையை கட்ட தமிழ்நாட்டின் ஒப்புதல் தேவையில்லை என்று மத்திய நீர்வளத்துறை மந்திரி ராஜ் பூஷன் சவுத்ரி எப்படி கூற முடியும்?

இந்த அடிப்படையில் தான் சிவசமுத்திரம் அணை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய நீர்வள ஆணையத்திடம் தாக்கல் செய்யப்பட்ட போது, அது திருப்பி அனுப்பப்பட்டதாக 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9& ஆம் தேதி அப்போதைய நீர்வளத்துறை மந்திரி உமாபாரதி எனக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார். இதற்கு முன் மத்திய நீர்வளத்துறை மந்திரியாக இருந்த கஜேந்திர ஷெகாவத், கடந்த 16.07.2021 ஆம் ஆண்டு தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர் சந்தித்து மேகதாது அணைக்கு மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடாது என்று வலியுறுத்தியது. அதற்கு பதிலளித்த மத்திய மந்திரி ஷெகாவத், தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடக அரசால் மேகதாது அணையை கட்ட முடியாது என்று உறுதியளித்தார். இவற்றுக்கெல்லாம் மாறான நிலைப்பாட்டை இப்போது நீர்வளத்துறை மந்திரி சவுத்ரி மேற்கொள்ள வேண்டிய தேவை என்ன?

கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளில் இன்று பிற்பகல் நிலவரப்படி 64 டி.எம்.சி தண்ணீர் உள்ளது. 4 அணைகளுக்கும் சேர்த்து வினாடிக்கு 13 ஆயிரம் கன அடி நீர் வருகிறது. ஆனாலும் கூட தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க கர்நாடக அரசு மறுக்கிறது என்றால் அங்குள்ள ஆட்சியாளர்கள் எந்த அளவுக்கு சட்டத்தை மதிக்காதவர்கள்; மனிதநேயமற்றவர்கள் என்பதை புரிந்து கொள்ளலாம். இப்போதே அரை டி.எம்.சி தண்ணீர் கூட கொடுக்காதவர்கள், மேகதாது அணையை கட்ட அனுமதித்தால் காவிரி பாசன மாவட்டங்களை பாலைவனமாக மாற்றாமல் ஓயமாட்டார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

மேகதாது அணை விவகாரத்தில் மத்திய அரசு எடுத்துள்ள புதிய நிலைப்பாடு நமக்கு சொல்லும் செய்தி என்னவென்றால், காவிரி நீரை தமிழ்நாட்டுக்கு வழங்காமல் இருப்பதற்காக பெரும் சதி நடக்கிறது என்பதும், இதில் மத்திய அரசும் பங்குதாரராக உள்ளது என்பதும் தான். எனவே, இந்த விவகாரத்தில் தமிழக அரசு கூடுதல் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்; இந்த விவகாரத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக கூட்ட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லையில் சக மாணவரை தாக்கிய பிளஸ் 2 மாணவர் கைது




திருநெல்வேலி, ஜூலை 29

நெல்லை மாவட்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில், பிளஸ்2 மாணவனை கட்டையால் தாக்கிய வழக்கில், சக பள்ளி மாணவனை போலீசார் கைது செய்தனர்.

நெல்லை மாவட்டம் மூலைக்கரைப்பட்டியில் அரசு மேல்நிலைப்பள்ளி அமைந்துள்ளது. அந்த பள்ளியில் பிளஸ்2 படிக்கும் பட்டியல் இன மாணவர் ஒருவர் நேற்று (திங்கட்கிழமை) பள்ளி வளாகத்தில் உள்ள குடிநீர் குழாயில் தண்ணீர் பிடிக்கச் சென்றார். அப்போது அங்கிருந்த மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த சக மாணவர் ஒருவருக்கும் இவருக்கும் இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த அந்த மாணவர் அங்கிருந்த மரக்கட்டையை எடுத்து, பாதிக்கப்பட்ட மாணவரின் தலையின் பின்புறத்தில் பலமாகத் தாக்கினார். மேலும், சாதிப் பெயரைச் சொல்லி வசைபாடிவிட்டு அந்த மாணவர் பள்ளி வளாகத்தில் இருந்து தப்பியோடினார்.

தலையில் பலத்த காயமடைந்த மாணவரை மீட்ட பள்ளி ஆசிரியர்கள், உடனடியாக சிகிச்சைக்காக திருநெல்வேலிஅரசுமருத்துவக்கல்லூரிஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட மாணவரின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், மூலைக்கரைப்பட்டி போலீசார் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். தனிப்படை அமைத்துத் தேடி வந்த நிலையில், இன்று தலைமறைவாக இருந்த மாணவனை போலீசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவரை நெல்லை சிறார் கோர்ட்டில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை போலீசார் செய்து வருகின்றனர். பள்ளி வளாகத்தில் நடந்த இந்தச் சாதியத் தாக்குதல் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பட்டமளிப்பு விழாவில் பங்கேற்காதது ஏன்? டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் விளக்கம்



நெல்லை, ஜூலை 29

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 33வது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கலந்துகொண்டார். இந்த விழாவில் 37 ஆயிரத்து 877 பேருக்கு பட்டம் வழங்கப்படுகிறது. விழாவில் 871 பேருக்கு கவர்னர் அர்லேகர் நேரடியாக பட்டங்களை வழங்கினார்.

இதனிடையே, தமிழக டிஜிபி மகேஷ்குமார் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் கிரிமினாலஜி துறையில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற இருந்தார். அவர் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், பட்டமளிப்பு விழாவில் டிஜிபி மகேஷ்குமார் பங்கேற்கவில்லை. காவல்துறை ஆலோசனை கூட்டம் மற்றும் அலுவலக பணிச்சுமை காரணமாக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கமுடியவில்லை என்று டிஜிபி தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தவிழாவில்தமிழ்த்தாய் வாழ்த்து 3வது இடத்தில் பாடப்படுவதற்கு கண்டனம் தெரிவித்து உயர் கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன், நெல்லை, கடையம் எம்.எல்.ஏ.க்கள் இந்த விழாவில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை ஐஐடி வளாகத்தில் அமைச்சர் நிர்மல்குமார் ஆய்வு: வெளியிட்ட முக்கிய அறிவிப்பு



சென்னை, ஜூலை 29

தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஐஐடி சென்னை இடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக இன்று ஐஐடி சென்னை வளாகத்திற்கு நேரில் சென்று பல்வேறு நவீன மின்சார தொழில்நுட்பங்களை ஆய்வு செய்தார்.

அப்போது, *Innovation Hub*, தூய்மை எரிசக்தி ஆய்வகம் *(Clean Energy Lab)*, திரவ மின்கல ஆய்வகம் *(Flow Battery Lab )*, மின்கல மறுசுழற்சிக்கான உயிரித்தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் 1 மெகாவாட் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு ஆகியவற்றை பார்வையிட்டு, மின்சார சேமிப்பு தொழில் நுட்பங்கள், பேட்டரி மறுசுழற்சி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பு மற்றும் மின் கட்டமைப்பு மேலாண்மை தொடர்பாக ஐஐடி ஆராய்ச்சியாளர்களுடன் விரிவான ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி பசுமை எரிசக்தி மாநிலமாக மாற்றும் நோக்கில் பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

★ உலகத்தரத்திலான *Battery Energy Storage System (BESS)* மற்றும் பேட்டரி மறுசுழற்சி தொடர்பான விரிவான புதிய கொள்கை, ஐஐடி சென்னை நிபுணர்களுடன் இணைந்து விரைவில் வெளியிடப்படும்.

★ மின்கட்டமைப்பின்தேவையைகருத்தில்கொண்டு, *Load Flow* ஆய்வின் அடிப்படையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு வெளிப்படையான மற்றும் அறிவியல் சார்ந்த அனுமதி நடைமுறை செயல்படுத்தப்படும்.

★ முன்பிருந்த நிலுவை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விண்ணப்பங்கள் உரிய தொழில்நுட்ப ஆய்வுக்கு பின் விரைவாக பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

★ வீட்டு மாடி சூரியமின் திட்டங்களை விரைவுபடுத்தும் வகையில், பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் புதிய கொள்கை, எளிய அனுமதி நடைமுறை மற்றும் ஒருங்கிணைந்த செயலி அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் மானியம், மீட்டர்பொருத்துதல், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் ஒரே தளத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

★ அதிகரித்து வரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை திறம்பட ஒருங்கிணைத்து, காலை மற்றும் மாலை உச்ச மின் தேவையை திறமையாக சமாளிக்க *BESS* தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுப் பயணம், தமிழ்நாட்டில் தடையற்ற மின் விநியோகம், மேம்பட்ட மின் வலையமைப்பு, தூய்மையான எரிசக்தி பயன்பாடு மற்றும் எதிர்கால தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்தும் அரசின் உறுதியான முன்னெடுப்பாக அமையும். ஐ.ஐ.டி பேராசிரியர்கள் சத்ய நாராயணன் சேஷாத்திரி, நிதின் முரளிதரன் மற்றும் மரபு சாரா எரிசக்தி தலைமை பொறியாளர். பி.ஜி. கலைவாணி உடனிருந்தனர்.

# தமிழ்நாட்டின் காவிரி நீர் உரிமையைத் தட்டிப் பறிக்க மத்திய பாஜக அரசு முயற்சி: வைகோ கண்டனம்



சென்னை, ஜூலை 29

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

மாநிலங்களவையில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் நீர்வளத்துறை இணை மந்திரி ஸ்ரீ ராஜ் பூஷன் சவுத்ரி அளித்துள்ள பதில் தமிழ்நாட்டிற்கு பாதகம் விளைவிக்குமோ என்ற ஐயம் எழுந்துள்ளது.

"காவிரி பிரச்சினை தொடர்பாக சுப்ரீம் கோர்ட் கடந்த 2018 பிப் 16 ம் தேதி அளித்த தீர்ப்பில், காவிரியின் குறுக்கே எந்தவொரு கட்டுமானத்தையும் கட்ட தமிழகம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் ஒப்புதலை கர்நாடகா பெற வேண்டும் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை."

"நடுவர் மன்ற தீர்ப்பின் ஒரு பகுதியாக, காவிரி நீரை அந்தந்த மாநிலத்தில் தங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் குடிநீர் உள்ளிட்ட தங்களது தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும், பலனை அனுபவிக்கவும், திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் எந்த கட்டுப்பாடும் இல்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது."

இவ்வாறு மத்திய நீர்வளத்துறை இணை மந்திரி கூறியிருப்பது கர்நாடக மாநிலம் மேகதாது அணை கட்டுவதற்கு வழங்கப்படும் அனுமதிக்கான சமிக்ஞை போன்று தெரிகிறது. 2018 பிப்ரவரி 16 ம் நாள் சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பு, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை உறுதி செய்வதாகவே இருக்கிறது. சுப்ரீம்கோர்ட்டின்தீர்ப்புமிகத்தெளிவானது.

"இந்தத்தீர்ப்பாயத்தின்உத்தரவுக்குமுரணாகஇல்லாத வகையில், ஒவ்வொரு மாநிலமும் தனது எல்லைக்குள் நீரின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தவும், அந்த மாநிலத்திற்குள் உள்ள நீரின் பயனை அனுபவிக்கவும் உள்ள அதிகாரம் பாதிக்கப்படாது.

# 3வது இடத்திற்கு தள்ளப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து; கனிமொழி கண்டனம்



தூத்துக்குடி, ஜூலை 29

நெல்லை மனோன்மணியம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டு, வந்தே மாதரம் முதலில் பாடப்பட்டதற்கு திமுக எம்.பி.கனிமொழி கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாகஅவர்எக்ஸ்தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:

முதன்முறையாக தமிழ்நாடு பல்கலைக்கழகம் ஒன்றில், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டு, வந்தே மாதரம் பாடலுடன் பட்டமளிப்பு விழா தொடங்கியுள்ளது.

வாய் இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா என்று கேட்டவர், இப்போது இதைக் கண்டித்து எதாவது பேசுவாரா? என அதில் பதிவிட்டுள்ளார்.

தினகனி



# நெல்லையில் அரிவாளுடன் சுற்றிய 6 பேர் அதிரடி கைது: கார், பைக்குகள் பறிமுதல்

திருநெல்வேலி, ஜூலை 29

திருநெல்வேலிமாவட்டம்,முன்னீர்பள்ளம்பகுதியில் சந்தேகப்படும்படி அரிவாள்களுடன் சுற்றித்திரிந்த 6 பேரை அதிரடியாக கைது செய்து, அவர்களிடம் இருந்து 3 அரிவாள்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி உட்கோட்டத்திற்கு உட்பட்ட முன்னீர்பள்ளம் காவல் நிலைய சரகத்தில் இன்று அதிகாலையில் போலீசார் தீவிர ரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது அரிவாள்களுடன் சந்தேகப்படும்படி சுற்றித் திரிந்த 6 பேரை துரிதமாக செயல்பட்டு போலீசார் கைது செய்தனர். ஏற்கனவே 19 வழக்குகளை உடைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி மணிகண்டன்(எ) வாத்துமணி (வயது 27), 18 வழக்குகளை உடைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி காளிமுத்து(23), 11 வழக்குகளை உடைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி பொன்ரங்கம்(எ) பொன்ராஜ்(19) மற்றும் சுடலை கிருஷ்ணன்(எ) முருகன்(40), இசக்கிமுத்து(எ) இயேசுராஜா(29), மகாராஜன்(18) ஆகிய 6 பேர் இன்று காலையில் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

கைது நடவடிக்கையின்போது பொன்ரங்கம்(எ) பொன்ராஜ் தப்பிச் செல்ல முயன்றபோது கீழே விழுந்ததில் அவரது வலது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் இந்த சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 3 அரிவாள்கள், 2 பைக்குகள் மற்றும் 1 கார் ஆகியவற்றை போலீசார்பறிமுதல் செய்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக முன்னீர்பள்ளம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து, கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# புதுவண்ணாரப்பேட்டை ஆர்.கே.நகர் தொகுதியில் திமுக கண்டன ஆர்ப்பாட்டம் - ஆர்.எஸ். பாரதி சிறப்புரை



சென்னை, புதுவண்ணாரப்பேட்டை, ஆர்.கே.நகர் தொகுதியில் திமுக சட்டத்துறை சார்பில், முன்னாள் தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியுடன், மக்கள் விரோத தவெக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று இரவு ஏ.ஐ. கோவில் தெருவில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு திமுக சட்டத்துறை துணைச் செயலாளர் மருது கணேஷ் தலைமை வகித்தார். சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி. சேகர் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக திமுக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

«"ஆர்.கே.நகரில் நடைபெறும் இந்தக் கூட்டத்தைப் பார்த்தால், நாம் எதிர்க்கட்சியா அல்லது ஆளுங்கட்சியா என்றே யோசிக்கத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு மக்கள் திரண்டுள்ளனர். ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியில் இருந்தாலும் மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது திமுக மட்டுமே.» «திமுகவை அழிக்க நினைத்தவர்கள் யாரும் வரலாற்றில் வெற்றி பெற்றதில்லை. 'திமுகவை மூட்டைப்பூச்சி போல நசுக்க வேண்டும்' என்று கூறிய ராஜாஜிக்கேமணிமண்டபம்கட்டியதுதிமுகஅரசுதான்.» «வடசென்னையின் வளர்ச்சிக்காக முன்னாள் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்கடந்தஐந்துஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தினார். ஆர்.கே.நகர் தொகுதி எவ்வளவு வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை அப்பகுதி மக்கள் நன்கு அறிவார்கள். திமுக அரசு கொண்டு வந்த திட்டங்களின் பெயரை மாற்றி தற்போதைய அரசு செயல்படுத்தி வருகிறது.»

«தற்போதைய அரசு மக்களுக்கு நன்மை பயக்கும் புதிய திட்டங்களை இதுவரை கொண்டு வரவில்லை. கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தின் போது, அப்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேரில் சென்று உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, தலா ₹10 லட்சம் நிவாரணம் வழங்கினார். ஆனால் தற்போதைய முதலமைச்சர் சம்பவ இடத்திற்கு செல்லாமல் சென்னைக்கு திரும்பி வந்தார்.» \ «திமுக அரசு மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் மாதம் ₹1,000 வழங்கியது. தேர்தலை முன்னிட்டு அந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டபோது, மு.க. ஸ்டாலின் உடனடியாக தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மூன்று மாதங்களுக்கான ₹3,000 மற்றும் ₹2,000 ஊக்கத்தொகையுடன் மொத்தம் ₹5,000ஐ தமிழகம் முழுவதும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிரின் வங்கிக் கணக்கில் வரவு வைத்தார்.» «மக்கள் பணிக்காக கால நேரம் பார்க்காமல் செயல்பட்ட அரசு திமுக அரசு. ஆனால் தற்போதைய அரசு மாலை 6 மணிக்குப் பிறகு அதிகாரிகளே மக்களை சந்திப்பதில்லை.»

«தமிழக அரசின் பல்வேறு துறைகளில் நிர்வாகக் குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன. சாலைகள் சேதமடைந்துள்ளன. மழைக்காலம் நெருங்கியும் அவற்றை சீரமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.» «லஞ்சம், ஊழல் இருக்காது என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது பல்வேறு முறைகேடுகளில் சிக்கியுள்ளனர். பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு சொந்தமான சுமார் ₹10 கோடி மதிப்புள்ள நிலம் குறைந்த மதிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதாககுற்றச்சாட்டுகள்எழுந்துள்ளன.» «அரசு வழக்கறிஞர் நியமனங்களிலும் முறைகேடு நடக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. பணம் கொடுத்து பதவி பெறுபவர்கள் நேர்மையாக செயல்பட முடியுமா என்ற கேள்வி எழுகிறது.»

«தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் அதிகாரிகளின் இருக்கைகளில் அமர்ந்து ஆய்வு நடத்துவது, மருத்துவமனைகளில் சென்று மருத்துவப் பணியாளர்களிடம் விசாரணை நடத்துவது, அதிகாரிகளின் பணிகளை அரசியல் ரீதியாக தலையிட்டு செய்வதுபோன்றசெயல்கள்நடைபெற்றுவருகின்றன.»

«சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தியது திமுக அரசுதான். வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரை மெட்ரோ சேவையை விரிவுபடுத்தியதும் திமுக அரசே. மதுரை, கோயம்புத்தூர் உள்ளிட்ட நகரங்களுக்கு மெட்ரோ திட்டத்தை விரிவுபடுத்த ஒன்றிய அரசு தடை ஏற்படுத்தியுள்ளது.»

«1984 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறவில்லை என்றாலும், அதன் பின்னர் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெரும்பாலான இடங்களில் திமுக வெற்றி பெற்றது. இன்னும் ஆறு மாதங்களில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலிலும் திமுக நிச்சயம் வெற்றி பெறும்.»

«திமுக தலைவர் சாதாரண தொண்டருக்கும் எளிதில் அணுகக்கூடியவர். ஆனால் தற்போதைய முதலமைச்சரை பொதுமக்கள் எளிதில் சந்திக்க முடியாத நி...

புதுவண்ணாரப்பேட்டை ஆர்.கே.நகர் தொகுதியில் திமுக கண்டன ஆர்ப்பாட்டம் – ஆர்.எஸ். பாரதி சிறப்புரை சென்னை, புதுவண்ணாரப்பேட்டை, ஆர்.கே.நகர் தொகுதியில் திமுக சட்டத்துறை சார்பில், முன்னாள் தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியுடன், மக்கள் விரோத தவெக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று இரவு ஏ.ஐ. கோவில் தெருவில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு திமுக சட்டத்துறை துணைச் செயலாளர் மருது கணேஷ் தலைமை வகித்தார். சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி. சேகர் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக திமுக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

«"ஆர்.கே.நகரில் நடைபெறும் இந்தக் கூட்டத்தைப் பார்த்தால், நாம் எதிர்க்கட்சியா அல்லது ஆளுங்கட்சியா என்றே யோசிக்கத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு மக்கள் திரண்டுள்ளனர். ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியில் இருந்தாலும் மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது திமுக மட்டுமே.»

«திமுகவை அழிக்க நினைத்தவர்கள் யாரும் வரலாற்றில் வெற்றி பெற்றதில்லை. 'திமுகவை மூட்டைப்பூச்சி போல நசுக்க வேண்டும்' என்று கூறிய ராஜாஜிக்கேமணிமண்டபம்கட்டியதுதிமுகஅரசுதான்.»

«வடசென்னையின் வளர்ச்சிக்காக முன்னாள் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்கடந்தஐந்துஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தினார். ஆர்.கே.நகர் தொகுதி எவ்வளவு வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை அப்பகுதி மக்கள் நன்கு அறிவார்கள். திமுக அரசு கொண்டு வந்த திட்டங்களின் பெயரை மாற்றி தற்போதைய அரசு செயல்படுத்தி வருகிறது.»

«தற்போதைய அரசு மக்களுக்கு நன்மை பயக்கும் புதிய திட்டங்களை இதுவரை கொண்டு வரவில்லை. கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தின் போது, அப்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேரில் சென்று உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, தலா ₹10 லட்சம் நிவாரணம் வழங்கினார். ஆனால் தற்போதைய முதலமைச்சர் சம்பவ இடத்திற்கு செல்லாமல் சென்னைக்கு திரும்பி வந்தார்.»

«திமுக அரசு மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம்மாதம்₹1,000வழங்கியது. தேர்தலைமுன்னிட்டு அந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என உச்சநீதிமன்றத்தில்வழக்கு தொடரப்பட்டபோது, மு.க. ஸ்டாலின் உடனடியாக தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மூன்று மாதங்களுக்கான ₹3,000 மற்றும் ₹2,000 ஊக்கத்தொகையுடன் மொத்தம் ₹5,000ஐ தமிழகம் முழுவதும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிரின் வங்கிக் கணக்கில் வரவு வைத்தார்.»

«மக்கள் பணிக்காக கால நேரம் பார்க்காமல் செயல்பட்ட அரசு திமுக அரசு. ஆனால் தற்போதைய அரசு மாலை 6 மணிக்குப் பிறகு அதிகாரிகளே மக்களை சந்திப்பதில்லை.»

«தமிழக அரசின் பல்வேறு துறைகளில் நிர்வாகக் குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன. சாலைகள் சேதமடைந்துள்ளன. மழைக்காலம் நெருங்கியும் அவற்றை சீரமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.»

«லஞ்சம், ஊழல் இருக்காது என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது பல்வேறு முறைகேடுகளில் சிக்கியுள்ளனர். பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு சொந்தமான சுமார் ₹10 கோடி மதிப்புள்ள நிலம் குறைந்த மதிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.»

«அரசு வழக்கறிஞர் நியமனங்களிலும் முறைகேடு நடக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. பணம் கொடுத்து பதவி பெறுபவர்கள் நேர்மையாக செயல்பட முடியுமா என்ற கேள்வி எழுகிறது.»

«தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் அதிகாரிகளின் இருக்கைகளில் அமர்ந்து ஆய்வு நடத்துவது, மருத்துவமனைகளில் சென்று மருத்துவப் பணியாளர்களிடம் விசாரணை நடத்துவது, அதிகாரிகளின் பணிகளை அரசியல் ரீதியாக தலையிட்டு செய்வதுபோன்றசெயல்கள்நடைபெற்றுவருகின்றன.»

«சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தியது திமுக அரசுதான். வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரை மெட்ரோ சேவையை விரிவுபடுத்தியதும் திமுக அரசே. மதுரை, கோயம்புத்தூர் உள்ளிட்ட நகரங்களுக்கு மெட்ரோ திட்டத்தை விரிவுபடுத்த ஒன்றிய அரசு தடை ஏற்படுத்தியுள்ளது.»

«1984 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறவில்லை என்றாலும், அதன் பின்னர் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெரும்பாலான இடங்களில் திமுக வெற்றி பெற்றது. இன்னும் ஆறு மாதங்களில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலிலும் திமுக நிச்சயம் வெற்றி பெறும்.» «திமுக தலைவர் சாதாரண தொண்டருக்கும் எளிதில் அணுகக்கூடியவர். ஆனால் தற்போதைய முதலமைச்சரை பொதுமக்கள் எளிதில் சந்திக்க முடியாத நிலை உள்ளது."» இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் திமுக மாநில துணை அமைப்பாளர் தாயகம்கவி, முன்னாள் எம்எல்ஏ எபினேசர், நரேந்திரன், கவி கணேசன், பகுதி செயலாளர் லட்சுமணன், வட்டச் செயலாளர்கள், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக திமுக இளைஞர் அணியினர் கருத்துரைகள் வழங்கி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

# பட்டமளிப்பு விழாவில் முதலில் பாடப்பட்ட வந்தேமாதரம்: இந்திய கம்யூனிஸ்ட் கண்டனம்




சென்னை, ஜூலை 29

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதலில் வந்தேமாதரம் பாடல் பாடப்பட்டதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் விடப்பட்டுள்ள அறிக்கை பின்வருமாறு;

நெல்லைமனோன்மணியம்சுந்தரனார்பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், வந்தேமாதரம் பாடல் முதலில் பாடப்பட்டுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உயர்கல்வித்துறை அமைச்சர் திரு'விஸ்வநாதன் அந்த விழாவை புறக்கணித்துள்ளார். இது வரவேற்பிற்குரியது.

இருப்பினும் தமிழ்நாட்டில் உள்ள மனோன்மணியம் பல்கலைக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் வழிகாட்டலை பின்பற்றாமல், ஆளுநர் ஆர். வி.அர்லேக்கர் ஆலோசனை அடிப்படையில் செயல்படுவது உயர்கல்வியில் தமிழ்நாட்டின் உரிமை பறிபோகிறதோ என்ற ஐயத்தை எழுப்புகிறது. அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரின் இச்செயல் கண்டிக்கத்தக்கது. அவர் மீது உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

தமிழ்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றிய கவிஞர் மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் அமைந்துள்ள, பல்கலைக் கழகத்திலேயே, தமிழுக்கு முதன்மை இடம் கிடைக்கவில்லை என்பது தமிழக மக்கள் மத்தியில் கடும் அதிர்ப்தியைஏற்படுத்தியுள்ளது.

"வந்தேமாதரம் " ஒரு குறிப்பிட்ட மதத்தின் சார்பு உடையதாகவும், சில வரிகள் முஸ்லீம் சிறுபான்மை மக்களுக்கு எதிரானதாகவும் உள்ளதால், அப்பாடலை தேசிய கீதமாக ஏற்கக் கூடாது என விடுதலை இயக்கக் காலத்திலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆளுநர் மாளிகை நிர்வாகத்தின் உத்தரவுப்படி, பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி நிரலில் "வந்தேமாதரம்" பாடலுக்கு முதலிடம் வழங்கி, தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாம் நிலையில் வைத்தது மரபை மீறிய செயலாகும்.

மத்திய அரசு அரசு நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு மாநிலத்தின் பாடல்களை முதலில் பாட வேண்டும் என அறிவுறுத்தியுள்ள நிலையிலும் கூட தமிழ்நாடு ஆளுநர் ஆர்.வி.அர்லேக்கர் தமிழை மூன்றாம் நிலைக்கு தள்ளச் செய்தது என்பது அவரது தமிழ் தமிழர் விரோத மனநிலையை வெளிப்படுத்துகிறது.

தமிழக ஆளுநர் ஆர்.வி.அர்லேக்கரை உடனடியாக ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டின் ஆடி மாத ஷாப்பிங் பாரம்பரியத்தைக் கொண்டாடும் ஜிவா ஒரு மாத கால சிறப்பு சலுகைகள் திட்டத்தை தொடங்குகிறது

தமிழ்நாட்டில் மிகவும் விசேஷமான ஆடி மாதம் பிறந்துள்ளதை முன்னிட்டு, GIVA நிறுவனம் தனது சென்னை ஆபரண விற்பனையகங்களில் ஒரு மாத காலத்திற்கு கொண்டாட்டத்தை அறிவித்துள்ளது. ஆடி பண்டிகைக் கால ஷாப்பிங், நவீன ஆபரண கலெக்ஷன்கள் மற்றும் சிறப்புப் பருவகாலச் சலுகைகளை ஒருங்கிணைத்த குதூகல கொண்டாட்டமாக இது இருக்கும்.

இந்தக் கொண்டாட்டங்கள் ஆகஸ்ட் 17ம் தேதி வரை தொடர்கின்றன. ஆடிப் பெருக்கு (ஆகஸ்ட் 1–3) திருவிழாநாட்கள், ஷாப்பிங் செய்வதற்கான உச்சக்கட்ட வார இறுதி நாட்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒரு மாத கொண்டாட்ட காலம் முழுவதும் வாடிக்கையாளர்கள் ஜிவா ன் அற்புதமான ஆபரண கலெக்ஷன்கள் மீது பிரத்யேகப் பருவகால சிறப்பு சலுகைகளைப் பெறலாம்.

இந்த சிறப்பு கொண்டாட்ட நிகழ்வு குறித்து ஜிவா–ன் தலைமை வருவாய் அதிகாரி . அனிருத் குத்வா பேசுகையில், "தமிழ்நாடு மாநிலம் ஜிவாவிற்கு ஒரு முக்கியமானசந்தையாகும்; மேலும் ஆடி மாதம் என்பது இப்பிராந்தியத்தில் அனைவராலும் மிகவும்




எதிர்பார்க்கப்படும் ஷாப்பிங் பருவங்களில் ஒன்றாகும். சிறப்பு சலுகைகளை வழங்கும் இந்த நிகழ்வின் மூலம், தமிழகமக்களின்பாரம்பரியத்தைநாங்களும்இணைந்து கொண்டாடுகிறோம்; சென்னை முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் எங்கள் நவீன, ஆபரண கலெக்ஷன்களை சிறப்பு சலுகைகளுடன் எளிதாக வாங்கி மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்." என்றார்...

# வீட்டின் கதவை உடைத்து 17 சவரன் நகை திருட்டு: ஆட்டோ ஓட்டுநர் கைது



தூத்துக்குடி, ஜூலை 29

தூத்துக்குடி மத்திய அரசு ஊழியர்கள் குடியிருப்பில், பூட்டிய வீட்டின் கதவை உடைத்து 17 சவரன் தங்க நகைகளை திருடிய ஆட்டோ ஓட்டுநரை தென்பாகம் போலீசார் கைது செய்தனர்.

தூத்துக்குடி மத்திய அரசு ஊழியர்கள் குடியிருப்பைச் சேர்ந்தவர்ராஜாசீனிவாசன். இவரது மனைவி உமாதேவி (வயது 61). இவர் கடந்த ஜூலை 22ம் தேதி குடும்பத்தினருடன்சுந்தரவேல்புரத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பியுள்ளார். அப்போது வீட்டின் முன்கதவு மற்றும் பீரோ உடைக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டிருந்த 17 சவரன் தங்க நகைகள் திருடப்பட்டிருந்தது தெரியவந்தது.

இந்த திருட்டு சம்பவம் குறித்து உமாதேவி அளித்த புகாரின்பேரில், தூத்துக்குடி தென்பாகம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டனர். சம்பவம் நடைபெற்ற பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி. டி.வி. கேமரா பதிவுகளை ஆய்வு செய்தபோது, அண்ணாநகரைச் சேர்ந்த நாராயணன் மகன் சீமான்(38) என்பவர் இத்திருட்டில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆட்டோ ஓட்டுநரான சீமானை கைது செய்த போலீசார், மேற்கொண்ட விசாரணையில், தனது நண்பர்கள் 2 பேரின் உதவியுடன் திருடப்பட்ட நகைகளை வங்கியில் அடகு வைத்திருப்பதாக தெரிவித்தார். கைது செய்யப்பட்ட சீமானை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போலீசார் சிறையில் அடைத்தனர். மேலும் இந்த திருட்டு சம்பவத்திற்கு உடந்தையாக இருந்த, தலைமறைவான 2 பேரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# விழுப்புரம்: ரெயில்வே மேம்பாலத்தில் விபத்து 2 பேர் பலி

விழுப்புரம், ஜூலை 29

விழுப்புரம் அருகே உள்ள ரெயில்வே மேம்பாலத்தில் நேரிட்டஅடுத்தடுத்தசங்கிலித்தொடர்வாகனவிபத்தில் 2பேர்சம்பவஇடத்திலேயேபரிதாபமாகஉயிரிழந்தனர்.

விழுப்புரம் மாவட்டம், அய்யூர் அகரம் ரெயில்வே மேம்பாலத்தில் சென்றுகொண்டிருந்த பைக் ஒன்று திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, எதிரே வந்த சொகுசு பஸ்சின் மீது பலமாக மோதியது.

இந்த எதிர்பாராத மோதலால் பேருந்து ஓட்டுநர் வாகனத்தை திடீரென நிறுத்த முயன்றார். அப்போது, பேருந்தின் பின்னால் அதிவேகமாக வந்துகொண்டிருந்த கார் மற்றும் டெம்போ ஆகிய வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக கட்டுப்பாட்டை இழந்து அடுத்தடுத்து மோதிக்கொண்டன.

இந்தகோரவிபத்தின்தாக்கத்தால், பைக்கில்பயணித்த விழுப்புரம் மாவட்டம் நரசிங்கபுரத்தைச் சேர்ந்த பூபதி மற்றும் காரில் பயணித்த சென்னை, முடிச்சூரைச் சேர்ந்த ஜான் அன்பழகன் (வயது 55) ஆகிய 2 பேர் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த விழுப்புரம்



போலீசார் மற்றும் பொதுமக்கள், வாகன இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தவர்களை மீட்டனர். மேலும் படுகாயமடைந்த லாசர், சாலமன் மற்றும் கார் ஓட்டுநர் பாலாஜி ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள அரசு பொது ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து விழுப்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தினர் 4 பேர் கைது



திருப்பூர், ஜூலை 29

திருப்பூர் முதலிபாளையம் அருகே நல்லூர் போலீசார் நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேரை பிடித்து போலீசார் விசாரித்தனர். விசாரணையில் அவர்கள், வங்காளதேசத்தை சேர்ந்த நஸ்ருல் இஸ்லாம் (வயது 39), நைமூர் ரஹ்மான் பாஹிம், நசீர் ஹொசைன் (29), மில் கிங்ஸ்டன் காக்ரா (36) என்பது தெரிய வந்தது.

இதையடுத்துஅவர்கள்வைத்திருந்தஆதார்கார்டுகளை சோதனை செய்தபோது, அது போலியானது என தெரியவந்தது. இவர்கள் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்து, திருப்பூர் சிட்கோ மற்றும் முதலிபாளையம் பகுதியில்தங்கிபனியன் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்ததும் தெரிந்தது. இதையடுத்துபோலீசார் அவர்கள் 4 பேரையும் கைது செய்தனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

29.07.2026

# தமிழ்நாட்டின் உரிமையை அடகு வைத்துள்ளார் முதல்அமைச்சர் விஜய்: உதயநிதி ஸ்டாலின் சாடல்




சென்னை, ஜூலை 28

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின்தனது எக்ஸ்தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

மேகதாது அணை கட்ட தமிழ்நாட்டின் அனுமதி கர்நாடகாவிற்குத் தேவை இல்லைஎன்றஒன்றியஇணைமந்திரியின் பதில்காவிரிவிவகாரத்தில்தமிழ்நாட்டின் உரிமையை கேள்விக்குறியாக்கி இருக்கிறது. டெல்லி எஜமானர்களை பகைத்துக் கொள்ளாமலும் ஆட்சிக்கட்டிலைக் காப்பாற்ற காங்கிரசுக்கு எதிராக பேசாமலும், தமிழ்நாட்டின் உரிமையை அடகு வைத்துள்ளார் முதலமைச்சர்.

இந்த பிரச்சினையில், தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஓரணியில் சென்று மத்திய அரசிடம் மேகதாதுவுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டுமென சட்டப்பேரவையில் பேசி இருந்தேன். கர்நாடகாவில் பட வசூல் பாதிக்கும் என்ற பயத்தில், இந்த ஷோபா மாடல் முதலமைச்சர், எதிர்க்கட்சிகள் சொன்னதையும் கேட்கவில்லை விவசாயிகளின் கோரிக்கையையும் ஏற்கவில்லை.

இனியும் காலம் தாழ்த்தினால் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும். எனவே, மேகதாதுவில் அணை கட்டும் முயற்சியை முறியடிக்க முதலமைச்சர் உடனடிநடவடிக்கைஎடுக்கவேண்டும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாலையில் உலா வந்த காட்டு யானை... வாகனங்களை விரட்டியதால் போக்குவரத்து பாதிப்பு!



தாளவாடி, ஜூலை 29

தாளவாடியில் இருந்து சத்தியமங்கலம் செல்லும் சாலையில் நேற்று மதியம் கும்பாரகுண்டி வனப்பகுதியில் இருந்து காட்டு யானை ஒன்று வெளியேறியது. இதையடுத்து சாலையில் காட்டு யானை உலா வந்தது. பின்னர் அந்த வழியாக வந்த வாகனங்களை யானை வழிமறித்து நின்றது. இதைத்தொடர்ந்து திடீரென ஆவேசமடைந்த யானை அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகளை துரத்தியது. இதனால்அச்சம்அடைந்தவாகனஓட்டிகள்அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

அப்போது அங்கு நின்ற அரசு பஸ் நோக்கி யானை ஓடி வந்தது. இதனால் பஸ்சில் இருந்த பயணிகள் பயத்தில் உறைந்தனர். ஆனால் அவர்களை எதுவும் செய்யாமல் சிறிது நேரம் சாலையில் உலா வந்த யானை வனப்பகுதிக்குள் சென்றது. அதன்பின்னரே பயணிகள் நிம்மதி அடைந்தனர். யானைதுரத்தியபோது ஆபத்தை உணராத சில வாகன ஓட்டிகள் அதன் அருகே சென்று செல்போனில் வீடியோ எடுத்தனர். அப்போது ஒரு பெண்ணும் யானையின் அருகே சென்று புகைப்படம் எடுத்தார். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் (29.07.2026)

**மேஷம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மூத்த அதிகாரிகளின் ஆதரவும் வழிகாட்டுதலும் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**ரிஷபம்:** தொழிலில் இருந்த சிக்கல்கள் விலகும். வங்கி கடன் முயற்சி செய்துகொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களை அளவுக்கு அதிகமாக நம்புவதைத் தவிர்க்கவும்

**மிதுனம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.வாகனப்பயணங்களிலும் பணப் பரிவர்த்தனைகளிலும் அதிக கவனம் தேவை.

**கடகம்:** சந்திராஷ்டம நிறைவு என்பதால் பிற்பகலுக்கு மேல் நிம்மதி கூடும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். கூட்டுத் தொழில் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்

**சிம்மம்:** தொழில் சார்ந்த விஷயங்களில் நிதானம் தேவை. அவசரப்பட்டு பெரிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல கவனம் மற்றும் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

**துலாம்:** புதிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். காதலிப்பவர்களுக்கு இடையே புரிந்துணர்வு கூடும். பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு:** பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுப பேச்சுகள் சுமுகமாக முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மையளிக்கும்.

**மகரம்:** சந்திரனின் சாதகமான நகர்வால் மன அமைதி கூடும். எதிர்பார்த்த உதவிகளும் பரிசுகளும் கிடைக்கும். ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்:** தேவையற்ற விரயச் செலவுகள் வரக்கூடும் என்பதால் சிக்கனம் தேவை. வெளிநாடு அல்லது வெளியூர் தொடர்பான செய்திகள் சாதகமாக வரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

# புதுக்கோட்டையில் பள்ளி மாணவர்கள் ஆபத்தான முறையில் பஸ் பயணம்: பெற்றோர் கலக்கம்



புதுக்கோட்டை, ஜூலை 29

புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள் ஆபத்தான முறையில் பஸ்சில் பயணம் செய்வதால் பெற்றோர் கலக்கமடைகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம்மீமிசலில்இருந்துபேராவூரணி வழியாகப் பட்டுக்கோட்டை நோக்கி தினமும் தனியார் பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. பள்ளி மற்றும் கல்லூரிகள் தொடங்கும் காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் இந்த வழித்தடத்தில் கடுமையான கூட்ட நெரிசல் காணப்படுகிறது.

போதிய பஸ் வசதிகள் இல்லாத காரணத்தினால், பள்ளி மாணவர்கள் வேறுவழியின்றிஇந்ததனியார்பஸ்களில் கூட்ட நெரிசலில் சிக்கி பயணம் செய்கின்றனர். குறிப்பாக, பேருந்தின் உட்புறத்தில் இடமில்லாததால் மாணவர்கள் ஆபத்தான முறையில் பின் மற்றும் முன் பக்கப் படிக்கட்டுகளில் தொங்கியபடியும், சிலர் கூரை மீது ஏறும் நிலையிலும் பயணிப்பதாக புகார்கள் எழுந்துள்ளன.

பஸ்கள் வளைவுகளில் திரும்பும்போதும், வேகத்தடைகளைக் கடக்கும்போதும் படியில் தொங்கும் மாணவர்கள் நிலைதடுமாறி கீழே விழும் அபாயம் உள்ளதாகச் சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்ற னர். புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கனவே ஆலங்குடி அருகே பஸ்சின் படிக்கட்டில் பயணித்த புவியரசன் என்ற 10ஆம் வகுப்பு மாணவன் கீழே விழுந்து உயிரிழந்த சோகம்நிகழ்ந்துள்ளதுகுறிப்பிடத்தக்கது.

தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு அவர்கள் பாதுகாப்பாக வீடு திரும்பும் வரை பெரும் மன உளைச்சலில் இருப்பதாகப் பெற்றோர்கள்கவலைதெரிவிக்கின்றனர். எனவே, இந்த வழித்தடத்தில் பள்ளி நேரங்களில் கூடுதல் அரசு பஸ்களை இயக்க போக்குவரத்துத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விதிகளுக்குப் புறம்பாக மாணவர்களை ஏற்றிச் செல்லும் தனியார் பஸ்கள் மீது கடுமையான கண்காணிப்பு மற்றும் சட்ட நடவடிக்கை தேவை என்றும் அப்பகுதி பொதுமக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# 'சூப்பர் எல் நினோ' தாக்குதல்: நீலகிரியில் தேயிலை சாகுபடி பாதிப்பு

ஊட்டி, ஜூலை 29

'சூப்பர் எல் நினோ' தாக்கத்தால் ஏற்பட்டுள்ள பருவநிலை மாற்றம், நீலகிரியில் தேயிலை சாகுபடியை பாதிக்கும் என்ற அதிர்ச்சித்தகவல் ஆய்வறிக்கையின் மூலம் வெளிவந்துள்ளது. இதுகுறித்து, யுபாசி தேயிலை ஆராய்ச்சி அறக்கட்டளை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: தேயிலை செடிகளில் இருந்து இளம் தளிர்கள் தொடர்ந்து பறிக்கப்படுவதால், 'சூப்பர் எல் நினோ'வால் அதிகரிக்கும் வெப்பநிலை, மண்ணின் ஈரப்பதம், காற்றின் ஈரப்பதம், மகசூல் மற்றும் தேயிலையின் தரத்தை நேரடியாக பாதிக்கின்றன. நீலகிரியில் சராசரி வெப்பநிலை 0.50 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது. மேலும், பனிப்பொழிவு, ஆலங்கட்டி மழையின் தாக்கம் அதிகரித்துள்ளதால், தேயிலை செடிகளின் வளர்ச்சியும், மகசூலும் பாதிக்கப்பட்டுள்ளது. 'சூப்பர் எல் நினோ' தாக்கத்தை சமாளிக்க, கிளிரிசிடியா போன்ற நிழல் தரும் மரங்களை வளர்க்க வேண்டும். மேலும், மண் நீர் பாது காப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும். வற ட்சியை தாங்கும்சாகுபடிமுறைகளையும்உடனடியாகமேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது

# பின்னலாடை தயாரிப்பு நூல் விலை கிலோவுக்கு ரூ.5 உயர்வு: உற்பத்தியாளர்கள் கவலை



திருப்பூர், ஜூலை 29

பின்னலாடை தயாரிப்புக்கான ஒசைரி நூல் விலை கிலோவுக்கு ரூ.5 உயர்ந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

சர்வதேச சந்தையில் பஞ்சு விலை தொடர்ந்து உயரத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக, நம் நாட்டிலும் பஞ்சு விலை உயர்வு வருகிறது. நேற்றைய நிலவரப்படி, ரூ.68 ஆயிரமாக இருந்த ஒரு கேண்டி (356 கிலோ) பஞ்சு, ரூ.70 ஆயிரமாக விலை உயர்ந்துள்ளது. அதேபோல், பின்னலாடை தயாரிப்புக்கான ஒசைரி நூலும் கிலோவுக்கு ரூ.5 அதிகரித்துள்ளது. கடந்த மாத (ஜூன்) தொடக்கத்தில், ஒசைரி நூல் விலை கிலோவுக்கு ரூ.10 குறைந்தது. ஆனால், கடந்த 22ந் தேதி ரூ.5ம், நேற்று ரூ.5ம் விலை உயர்ந்து பழைய நிலையை எட்டியுள்ளது.

நூல் விலை தொடர்ந்து இவ்வாறு உயர்வதால், உற்பத்தி செலவு அதிகரித்து, நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்படுவதாக ஜவுளி தொழில் துறையினர் கவலை தெரிவித்துள்ளனர். நூல் விலை உயர்வு குறித்து பின்னலாடை உற்பத்தியாளர்கள் கூறும்போது, "பஞ்சு இறக்குமதிக்கான வரி விலக்கு குறுகிய காலத்திற்கு அளிக்கப்படுவதால் எந்தப் பயனும் இல்லை. தற்போதைய விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில், 2027 பிப்ரவரி மாதம் வரையிலான வரி விலக்கு சலுகை நீட்டிக்கப்பட வேண்டும்" என்று கூறினர்.

# காமன்வெல்த் போட்டிகள்: பாரா தடகள பிரிவில் இந்தியாவுக்கு முதல் தங்கம் வென்றார் ஷர்மிளா தன்கர்



2026 காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் பாராதடகள பிரிவில் பெண்களுக்கான 'ஷாட் புட்' F57 பிரிவில் இந்தியாவுக்கான முதல் தங்க பதக்கத்தை வென்று ஷர்மிளா தன்கர் வரலாறு படைத்தார்.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் 23வது காமன்வெல்த் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டிகளின் 5வது நாளான நேற்று இந்தியா 1 தங்கம் உள்பட 6 பதக்கங்களை வென்றுள்ளது. இதில் நேற்று நடைபெற்ற பாரா தடகளப் பிரிவில் (மாற்றுத்திறனாளிகள்) பெண்களுக்கான F57 பிரிவு குண்டு எறிதல் போட்டியில் இந்தியா சார்பில் 40 வயதான மாற்றுத்திறனாளி வீரர் ஷர்மிளா தன்கர் கலந்துகொண்டார்.

40 வயதான இவர் 9.81 மீட்டர் தூரத்திற்கு குண்டு எறிந்து இந்த சீசனிலேயே தனது சிறந்த செயல்பாட்டை வெளிப்படுத்தினார். இதன் மூலம் காமன்வெல்த் போட்டிகளில் பாராதடகள பிரிவில் பதக்கம் வெல்ல இந்தியாவின் 20 ஆண்டுகால காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார். ஷர்மிளா தன்கர் 9.81 மீட்டர் தூரத்திற்கு குண்டு எறிந்து இந்த சீசனில் அவரது சிறந்த விளையாட்டை வெளிப்படுத்தித் தங்கப் பதக்கத்தை வென்றார். இவருக்கு அடுத்ததாக இரண்டாமிடத்தில் 8.65 மீட்டர் தூரம் எறிந்த கானாவின் ஜினாபு இசா வெள்ளிப் பதக்கமும், நைஜீரியாவின் யூச்சாரியா இகியாசி 8.19 மீட்டர் தூரம் எறிந்து வெண்கலப்பதக்கமும் வென்றனர். ஹரியானாவைச்சேர்ந்தஷர்மிளா, சிறுவயதிலேயே இளம்பிள்ளைவாதத்தால் (போலியோ) பாதிக்கப்பட்டவர். குடும்ப வன்முறை, மோசமான சூழல் என பல சவால்களைக் கடந்து 34 வயதிற்குப் பின் விளையாட்டு வாழ்க்கைக்குள் வந்த இவர் இன்று சர்வதேச அளவில் இந்தியாவிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

ஷர்மிளாவின் இந்த வெற்றியின் மூலம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பாரா தடகளப் பிரிவில் இந்தியா தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்று சாதனைப் படைத்துள்ளது. அதேபோல 2026 தொடரில் இந்தியாவுக்கு இது இரண்டாவது தங்கப் பதக்கமாகும். பாரா தடகளத்தில் இதே பிரிவில் இந்தியாவின் மற்றொரு வீரரான சில்பா ஷைலா வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். இதன்மூலம் இந்தியா ஒரே போட்டியில் இரு பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது. சர்ச்சைக்குரிய சூழலில் இந்தியா தரப்பில் அளிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து, மற்றொரு இந்திய வீராங்கனையான ஷில்பா ஷைலாவுக்கு வெண்கல பதக்கம் வழங்கப்பட்டது. ஷைலா 7.26 மீட்டர் தூரம் எறிந்து தனது தனிப்பட்ட சிறந்த சாதனையை பதிவு செய்திருந்தார். தொடக்கத்தில் நைஜீரியாவின் யூச்சாரியா ஜயாசி வெண்கல பதக்கம் வென்றிருந்தார். ஆனால் இந்திய தரப்பு புகாரளித்து அதிகாரப்பூர்வ மறுஆய்வு செய்யப்பட்ட பிறகு, அவரது ஒரே செல்லுபடியாகும் முயற்சி 'ஃபவுல்' (விதிமீறல்) என அறிவிக்கப்பட்டது. இதனால் நான்காவது இடத்தில் இருந்த ஷைலாவுக்கு வெண்கல பதக்கம் கிடைத்தது. இருப்பினும் நைஜீரியா தரப்பில் இருந்தும் இதற்கு எதிராகப் புகார் அளிக்கப்பட வாய்ப்புள்ளது. வெண்கல பதக்கம் கிடைத்த அந்த திருப்பமான தருணத்திற்கு பிறகு, கண்ணீர் மல்க ஷைலா, ஷர்மிளாவுடன் இணைந்து கொண்டாடினார். இதன் மூலம் இப்பிரிவில் இந்தியாவுக்கு இரண்டு பதக்கங்கள் கிடைத்தன. F57 வகைப்பாடு என்பது கீழ் உடல் உறுப்பு குறைபாடுகள், உறுப்பு இழப்புகள் அல்லது தசை வலிமை குறைவு உள்ள விளையாட்டு வீரர்களுக்கான பிரிவாகும். 2 வயதில் இடது காலில் போலியோ பாதிப்புக்குள்ளான ஷர்மிளா, இந்த ஆண்டு நடைபெற்ற ஃபாஸ்ஸா' (Fazza) சர்வதேச பாராதடகளசாம்பியன்ஷிப் போட்டியில் தங்க பதக்கம் வென்றார். அவர் 2022 பர்மிங்காம் காமன்வெல்த் போட்டிகளிலும் பங்கேற்று 4வது இடத்தை பிடித்திருந்தார்.

# வங்காளதேசம் செல்லும் இந்திய அணி?... ஆப்கானிஸ்தான் தொடருக்கு பாதிப்பா? வெளியான பரபரப்பு தகவல்



இந்திய கிரிக்கெட் அணி இந்த ஆண்டின் இறுதியில் வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்தியா கடந்த ஆண்டே வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் செய்ய திட்டமிட்டிருந்தது. ஆனால், சில காரணங்களால் அது ஒத்திவைக்கப்பட்டது. அதன்பிறகு, ஐபிஎல் 2026 தொடருக்கு முன்னதாக கொல்கத்தாநைட் ரைடர்ஸ் அணி முஸ்தபிசுர்ரஹ்மானை விடுவித்ததைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு கிரிக்கெட் உறவில் பின்னடைவு ஏற்பட்டது.

இதன் விளைவாக டி20 உலகக்கோப்பை போட்டிகளை இந்தியாவிற்கு வெளியே மாற்ற வேண்டும் என்று வங்காளதேச கிரிக்கெட்வாரியம்சர்வதேசகிரிக்கெட்கவுன்சிலிடம்(ICC)வலியுறுத்தியது.எனினும்,அந்தகோரிக்கைநிராகரிக்கப்பட்டது. அதன் காரணமாக வங்கதேசத்திற்கு பதிலாக ஸ்காட்லாந்து சேர்க்கப்பட்டது. தற்போது இரு வாரியங்களுக்கிடையே விரிசல் சீரடைந்து வரும்நிலையில், இந்திய அணி இந்த ஆண்டின் இறுதியில் வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதற்கிடையில், செப்டம்பர் மாதத்தில் டெல்லியில் இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரில் விளையாட ஆப்கானிஸ்தானும் திட்டமிட்டுள்ளது. இந்த தொடர் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகாத நிலையில், அதே நேரத்தில் இந்தியா வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டால், ஆப்கானிஸ்தான் தொடரின் அட்டவணையில் மாற்றம் அல்லது ஒத்திவைக்கப்பட வாய்ப்புள்ளது.

இந்திய அணி ஆகஸ்ட் 15 முதல் இலங்கைக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. அதன்பிறகு, ஸ்ரேயஸ் ஐயர் தலைமையிலான இந்திய டி20 அணி, செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 3 வரை ஜப்பானில் நடைபெறவுள்ள 2026 ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கிறது.

# 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு எதிராக உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக பல ஆண்டுகள் ரசிகர்களை கவர்ந்த விஜய், தற்போது தமிழக முதல்அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். அரசியலில் முழு கவனம் செலுத்தும் வகையில், அவர் நடித்த கடைசி திரைப்படமாகஉருவான'ஜனநாயகன்', இயக்குநர்எச். வினோத்இயக்கத்தில் கடந்த 23ந்தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது.

வெளியீட்டுக்கு முன்பும், வெளியான பிறகும் பல்வேறு சவால்களை சந்தித்த 'ஜனநாயகன்', திரையரங்குகளில் வெளியான சில மணி நேரங்களிலேயே சட்டவிரோதமாக இணையத்தில் கசிந்தது. இருப்பினும், விஜய்யின் கடைசி திரைப்படம் என்ற காரணத்தால் ரசிகர்கள் திரையரங்குகளில் படத்தை கொண்டாடி வருகின்றனர். இதுவரை படம் ரூ.250 கோடி வரை வசூல் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், ஜனநாயகன் திரைப்படத்திற்கு எதிராக உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மதுரை உசிலம்பட்டியை சேர்ந்த சின்னசாமி என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த மனுவில், ``ஜனநாயகன் திரைப்படத்தில் படத்தில் பொய்யானகாட்சிகள்அமைக்கப்பட்டுள்ளதாக மதுரை, பாப்பாபட்டி கிராம மக்கள்சார்பில் வழக்கு. பாப்பாபட்டி பகுதியை வன்முறை பூமியாக தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடிய வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. ஜனநாயகன் படத்தில் வன்முறையை தூண்டும் காட்சிகளை நீக்க வேண்டும். பாப்பாபட்டி பகுதியின் நற்பெயருக்கு படக்குழு களங்கம் விளைவித்துள்ளது . படக்குழு மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு வழக்கறிஞர் , "மனுதாரர் சமூக வலைதளங்களில் படத்தை பார்த்ததாக சொல்கிறார், அதுவே குற்றம். சட்டவிரோதமாக படத்தை பார்த்து எப்படி ஆட்சேபனைகளை தெரிவித்தீர்கள்?..படத்தில் படத்தில் பாப்பாப்பட்டி என்று இடம் பெறவில்லை. பாப்பம்பட்டி என்று தான் வருகிறது" என்ற கேள்வி எழுப்பினார். இருதரப்பு விவாதத்தையும் கேட்ட மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள், படத்தை சட்டவிரோதமான இணையத்தில் பார்ப்பது போன்ற விஷயங்கள் ஊக்குவிக்கத்தக்கது அல்ல என்று நீதிபதிபதி காட்டமாக தெரிவித்தனர். மேலும், இந்த வழக்கு தொடர்பாக பதிலளிக்குமாறு தணிக்கை வாரியம், இயக்குநர் எச். வினோத், பட தயாரிப்பாளர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பியதோடு மனு மீதான விசாரணையை ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# ரசிகர்களின் கைத்தட்டல்தான் மிகப்பெரிய விருது ரம்யா ரங்கநாதன்



யுவராஜ் கணேசன் தயாரித்து பாரி இளவழகன் இயக்கி நடித்த 'அன்பே டயானா' படம் சமீபத்தில் வெளியாகி 'ஹிட்' அடித்தது. ரம்யா ரங்கநாதன், ரோஜா, சேத்தன் உள்பட பலரும் நடித்துள்ளனர். 'அன்பே டயானா' படத்தின் வெற்றி குறித்து கதாநாயகி ரம்யா ரங்கநாதன் பேசும்போது, 'அன்பே டயானா' படத்துக்கு ரசிகர்கள் அளித்த வரவேற்பு மகிழ்ச்சி அளிக்கிறது. நல்ல டீம் கிடைத்தால் மகிழ்ச்சியும், வெற்றியும் தானாக கிடைக்கும். அப்படித்தான் இந்த வெற்றி கிடைத்திருக்கிறது. ரசிகர்களின் கைத்தட்டல்தான் எங்களுக்கு மிகப்பெரிய விருது. நமது பெயரை அழைப்பதற்கு பதில், கதாபாத்திரத்தின் பெயரை சொல்லி அழைப்பதை நாம் பெரிதும் விரும்புகிறோம். அந்த வகையில் என்னை எல்லோரும் 'மேஜிக்' (கதாபாத்திரத்தின் பெயர்) என்று கூப்பிடுவது மகிழ்ச்சியாக இருந்தது. எனது வாழ்க்கையில் நடந்த மேஜிக் இது. படத்தை பார்த்து நிஜத்திலேயே ஆங்கிலோ இந்தியன் என்றே என்னை அழைக்க தொடங்கி விட்டார்கள். அந்தவகையில் எனக்கு ஒரு நல்ல அடையாளம் கிடைத்ததாகவே உணருகிறேன்" என்று கூறினார்.

# துல்கர் சல்மான் நடிக்கும் "ஸ்ரீ ஸ்ரீ" படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் வெளியானது

மலையாள சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரான துல்கர் சல்மான், மம்முட்டியின் மகன் என்ற அடையாளத்தைத் தாண்டி தனது நடிப்பு மற்றும் வித்தியாசமான கதைத்தேர்வுகளால் தனக்கென ஒரு ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியுள்ளார். 'வாயை மூடி பேசவும்', 'ஓகே கண்மணி' படங்கள் மூலம் தமிழ் ரசிகர்களின் மனதை கவர்ந்த அவரது நடிப்பில் வெளியான 'லக்கி பாஸ்கர்' திரைப்படத்தின் மூலம் ரூ.100 கோடிக்கும் மேல் வசூல் சாதனை படைத்தார்.

தற்போது துல்கர் சல்மான், 'ஐயம் கேம்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்தப் படம் வரும் ஆகஸ்ட் 20ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. மேலும், இயக்குநர் பவன் சதினேனி இயக்கத்தில் உருவாகும் நேரடி தெலுங்கு திரைப்படமான 'ஆகாசம்லோ ஒக தாரா' படத்திலும் நடித்து வருகிறார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கிறார்.

இதற்கிடையில், இயக்குநர் ரவி நெலகுதிதி இயக்கத்தில் உருவாகி வரும் துல்கர் சல்மானின் 41வது திரைப்படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நடிகை பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடிக்க, ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கிறார். ஸ்ரீ லட்சுமி வெங்கடேஷ்வரா சினிமாஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்து வருகிறது. இந்தப் படத்திற்கு 'ஸ்ரீ ஸ்ரீ' என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், 'ஸ்ரீ ஸ்ரீ' படத்தின் பர்ஸ்ட் சிங்கிளான 'பொம்மா பொம்மா' பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ள இப்பாடலை கபில் கபிலன் பாடியுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.